# சர்ச்சைக்குரிய சனல் - 4 காணொளி விடயம் சர்வதேச விசாரணைக்கும் அரசு தயாராம்!

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



சனல் - 4 காணொளி தொடர்பில் விசாரணை நடத்தப்படும் எனவும், நேற்று அமைச்சரவைக் கூட்டத்திலும் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியல் மட்டத்தில் மீண்டும் ஒரு சர்ச்சையினைக் கொண்டு வந்துள்ள சனல் - 4 காணொளி தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி, இன்றைய நாடாளுமன்ற அமர்வில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சனல் - 4 அலைவரிசையின் காணொளி தொடர்பில் அரசாங்கம் என்ற ரீதியில் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும், இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சர்வதேச ரீதியாக இது தொடர்பில் தேவைகள் இருப்பின் அது குறித்தும் கவனம் செலுத்த அரசாங்கம் என்ற ரீதியில் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 17 செவ்வாய்க்கிழமை 05.09.2023 கதிர் 65

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## சுதந்திர தினத்தை கரி நாளாக பிரகடனம் முக்கியஸ்தர்களுக்கு நீதிமன்று பிடியாணை

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சார்ல்ஸ் நிர்மலநாதன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு யாழ்.நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழர்களின் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி பல்கலைக்கழக மாணவர்களால் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அதில் கலந்துகொண்டமைக்காக வேலன் சுவாமிகள் மற்றும் தமிழ்த் தேசிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 7 பேருக்கு எதிராக பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்றைய தினம் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றபோது அங்கு பிரசன்னமாகாத காரணத்தினாலேயே மேற்குறிப் பிடப்பட்டவர்களுக்கு பிடியாணை பிறப் பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதோடு, சட்டத்தரணி கே.வி தவராசா மற்றும் சட்டத்தரணி பிருந்தா ஆகியோர் அங்கு முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எட்டு வயதுச் சிறுமியின் கை அகற்றப்பட்டமை சம்பந்தப்பட்டவர்களைப் பகிரங்கப்படுத்துக!

### முன்னாள் திடீர் மரண விசாரணை அதிகாரி

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் எட்டு வயதுச் சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைவரையும் பொது வெளியில் பகிரங்கப்படுத்த வேண்டும் எனவும், வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சத்திய மூர்த்தியே இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் எனவும் யாழ் போதனா வைத்தியசாலையின் முன்னாள் திடீர் மரண விசாரணை அதிகாரி முத்துக்குமாரு உதயஸ்ரீ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் எட்டு வயதுச் சிறுமி ஒருவரின் கை உரிய முறையில் சிகிச்சை மேற்கொள்ளப்படாமை யினால் அகற்றப்பட்டுள்ளது. இச்சம்பவம் மிகுந்த மன வேதனையையும் கடும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

2 ➤

## வடக்கு தொடருந்து பாதை ஜனவரியில் மூடப்படும்!



எதிர்வரும் 6 மாதங்களுக்குள் வடக்கு தொடருந்து பாதையை நவீனமயப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளுக்காக எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வடக்கு தொடருந்து பாதையை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், கொழும்பு முதல் பாணந்துறை வரையிலான தொடருந்து பாதையை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் சில நாட்களுக்குள் ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, கொழும்பிலிருந்து காங்கேசன்-துறை வரை மணித்தியாலத்திற்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் தொடருந்துகளை இயக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

களனி மிட்டியாவத்தை தொடருந்து பாதையின் வேகக் கட்டுப்பாட்டை நீக்கி, வேகத்தை அதிகரிப்பதற்கான புனரமைப்பு பணிகளையும் இம்மாத முற்பகுதியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

## உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டமூலத்தினை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம்

உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என உயர் நீதிமன்றம் நாடாளுமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை கடந்த ஓகஸ்ட் 28 ஆம் திகதி முடிவடைந்தது. அதன்படி, இந்த தீர்ப்பு சபாநாயகருக்கு அனுப்பப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்தது. தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளரான சதுரங்க அபேசிங்க உள்ளிட்ட இருவரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தனது டுவிட்டர் கணக்கில் ஒரு குறிப்பைப் பதிவிட்டு, தேசிய கடன் சீரமைப்பு திட்டத்தை தாமதப்படுத்துவதன் மூலம், வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பைச் சீர்குலைக்க பல அரசியல் சக்திகள் செயற்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.(க)

## இறந்தும் உயிர் வாழும் மாணவிக்கு 3 ஏ சித்தி

மூளைச்சாவடைந்ததால் தனது உடல் உறுப்புகளை வழங்கி ஏழு பேருக்கு உயிர் கொடுத்து இவ்வுலகைவிட்டுச் சென்ற 19 வயது மாணவியான விஹகனா ஆரியசிங்க, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளார்.

குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியில் இருந்து வர்த்தகப் பிரிவில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய அவர், மூன்று ஏ சித்திகளைப் பெற்றுள்ளார்.

மாவட்ட மட்டத்தில் 176 ஆவது இடத்தையும், தேசிய மட்டத்தில் 2 ஆயிரத்து 256 ஆவது இடத்தையும் அவர் பெற்றுள்ளார்.

2 ➤

## யாழில் மது விருந்தில் ஏற்பட்ட கை கலப்பு சிகிச்சை பலனின்றி இளைஞன் உயிரிழப்பு!

மதுவிருந்தில் ஏற்பட்ட கைக்கலப்பில் தாக்குதலுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி உழவனூரை சேர்ந்த செல்வக்குமார் ஜெகதீஷ்குமார் வயது 28 என்பவரே நேற்று உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 31ஆம் திகதி எழுதுமட்டுவாழ் பகுதியில் உறவினர் வீடொன்றில் நடைபெற்ற நிகழ்வுக்கு, கிளிநொச்சியில் இருந்து மூவர் சென்றிருந்த நிலையில், நிகழ்வைத் தொடர்ந்து இடம்பெற்ற மது விருந்தில் கலந்து கொண்டனர்.

இந்த விருந்தின்போது எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் கிளிநொச்சியில் இருந்து சென்றவர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது

2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# உயர்தரப் பரீட்சை முடிவுகள் யாழ் இந்துவுக்கு முதல்நிலை





2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதம் மற்றும் உயிரியல் பிரிவுகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

பௌதிகப் பிரிவில் 6 மாணவர்களும் உயிரியல் பிரிவில் 5 மாணவர்களும்

யாழ்ப்பாணம் மாவட்ட மட்டத் தர நிலையில் இடம் பிடித்துள்ளனர்.

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் ஆனந்தஜோதி வித்தியாஷாகர் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதல் நிலையும் தேசிய மட்டத்தில் 9 ஆவது நிலையும் பெற்றுள்ளார்.

கணிதப்பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட மட்டத்தில் ஸ்ரீபண்டாகரன் சினேகன் முதல் நிலை பெற்றார். (01)

## சீரற்ற காலநிலை: 6,000 பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த 6,049 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் இன்று காலை வெளியிடப்பட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, களுத்துறை, கொழும்பு, இரத்தினபுரி, கேகாலை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, காலி, மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலத்த மழை மற்றும் காற்றால் நாடளாவிய ரீதியில் 122 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (01)

## யாழில் மது விருந்தில் ஏற்பட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கலப்பாக மாறியுள்ளது.

அதன்போது, தற்போது உயிரிழந்துள்ள ஜெகதீஷ் குமார் என்பவரைக் கட்டி வைத்தும் தாக்கியுள்ளனர். பின்னர் அங்கிருந்தவர்கள் அவர்களைச் சமரசப்படுத்தி அவ்விடத்தில் இருந்து அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த நிலையில், திடீர் உடல்நலக் குறைபாடு ஏற்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள கொடிகாமப் பொலிஸார் இருவரை கைது செய்துள்ளனர். (க)

## இறந்தும் உயிர் வாழும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1.7 இஸட் புள்ளிகளை அவர் பெற்றுள்ளார்.

குருநாகல் பகுதியில் மூளைப் புற்றுநோய் காரணமாக மூளைச்சாவடைந்த மாணவியொருவர் தனது உடல் உறுப்புகளை வழங்கி 7 பேரின் உயிர்களைக் காப்பாற்றிய நெகிழ்ச்சியான சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

இலங்கையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள் குழுவொன்று இதயம் மற்றும் நுரையீரல் இரண்டையும் ஒரே நோயாளிக்கு மாற்றுவதற்கான முதல் சத்திர சிகிச்சையை மேற்கொண்டு சாதனை படைத்தது.

இதன்போது உறவினர்களின் அனுமதியுடன் மூளைச்சாவடைந்த மாணவியின் இதயம் மற்றும் நுரையீரல்கள் என்பன இதயம் மற்றும் நுரையீரல் செயலிழந்து ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த மருந்துவ நிபுணருக்குப் பொருத்தப்பட்டன.

குறித்த மாணவியிடமிருந்து எடுக்கப்பட்ட இரண்டு சிறுநீரகங்களும் குருநாகல் போதனா வைத்தியசாலையின் சிறுநீரகப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவருக்கு வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டன.

மேலும், கல்லீரல் மற்றும் கண் சவ்வுகள் என்பன மூன்று பேருக்கு ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உதவும் வகையில் வழங்கப்பட்டதுடன் விஹகனாவின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட ஏனைய உறுப்புகள் மூலம் மொத்தம் ஏழு பேரின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது. (03)

## எட்டு வயதுச் சிறுமியின் கை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த சிறுமி படிப்பிலும் விளையாட்டிலும் திறமையானவராக விளங்கியதுடன் பரதநாட்டியத்திலும் திறமை உள்ளவராக காணப்பட்டுள்ளார். இந்தச் சிறுமியின் கை அகற்றப்பட்டமையினால் அவரின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளதோடு குறித்த சிறுமி வாழ்க்கை பூராகவும் பாரிய துன்பத்திற்கு ஆளாக வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளார்.

இதற்கு முழுக் காரணமான சம்பந்தப்பட்ட தாதியர்கள், வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் அனைவரும் தண்டிக்கப்படவேண்டும். குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களின் பெயர் விவரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்தால்தான் இனிமேலும் இவ்வாறு நிகழாமல் இருக்கும்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் விசாரணைக்கும், சட்ட நடவடிக்கைக்கும் உட்படுத்தப்பட வேண்டும். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக இருக்கும் வைத்தியர் சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண சுகாதார சேவைகளின் பணிப்பாளராகவும் விளங்குகின்றார். இவர் ஒரே நேரத்தில் இரண்டு குதிரைகளில் சவாரி செய்ய விரும்புகின்றார்.

போதனா வைத்தியசாலையில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்திற்கு பொறுப்பு கூற வேண்டியவர் வைத்தியர் சத்தியமூர்த்தி. மாகாணத்தில் ஒரு தவறு நடந்தாலும் அதற்கும் மாகாண ரீதியில் பொறுப்பு கூற வேண்டியவரும் சத்தியமூர்த்தியாகும்.

ஆனால், அண்மைக்காலங்களாக வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம்,கிளிநொச்சி முல்லைத்தீவில் காணப்படும் அரச வைத்தியசாலைகளில் நடக்கும் தவறுகள் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில், அண்மையில் கிளிநொச்சியில் பெண் ஒருவரின் கர்ப்பப்பை அகற்றப்பட்டமை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் சத்தியமூர்த்தியின் கவனத்திற்கு கொண்டு வந்ததோடு, அது தொடர்பான விசாரணைகள் நடத்தப்படும் என அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அவர் குறித்த சம்பவம் தொடர்பாக வைத்தியர்களை நியாயப்படுத்தும் வகையில் அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்துக்களையும் தெரிவித்திருந்தார். இவ்வாறான நிலையில் மக்கள் இவரிடம் எவ்வாறு நியாயத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்?

அரச நிறுவனம் ஒன்றில் ஒருவர் தொடர்ச்சியாகப் பணியாற்ற முடியாது. ஆனால், இவர் தொடர்ச்சியாக தற்போது யாழ் போதான வைத்தியசாலையின் பணிப்பாளராகப் பணியாற்றி வருகின்றார். இவ்வாறான நிலையில், இவருடைய காலத்திலேயே அதிகளவிலான முறைப்பாடுகள் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

மாகாணத்திலும்,மாவட்டத்திலும் தகுதியான பல வைத்தியர்கள் இருக்கின்ற போதும் தொடர்ச்சியாக இவர் இந்தப் பதவியில் இருந்து வருகின்றார். இதனால், ஏனையவர் தகுதி இருந்தும் குறித்த பதவிக்கு வர முடியாமல் இருக்கின்றது, என அவர் குறிப்பிட்டிருக்கிறார். (01)

## சர்ச்சைக்குரிய சனல் - 4 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிப்பட்ட முறையில் அமைச்சர் என்ற வகையில் மட்டுமன்றி, நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் எதிர்கட்சியில் இருந்து தான் கேள்விகளைத் தொடுத்தவர் என்ற முறையிலும், ஜெனீவா மனித உரிமைகள் குழு கூடும் கால கட்டத்தில் இவ்வாறான காணொளிகள் சனல்- 4 அலைவரிசையில் இருந்து தொடர்ந்தும் ஒளிபரப்புவது வழமைதான் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த காணொளியில் உள்ள கருத்துக்கள் தொடர்பில் கட்டாயமாக ஆராய வேண்டும் என வலியுறுத்தியுள்ள அவர், காணொளியில் கூறப்படுவது போல் குறித்த திகதியில், குறித்த நேரத்தில் அவ்வாறான கலந்துரையாடல்கள் இடம்பெற்றனவா, இல்லையா? என்பது முக்கியமாக ஆராயப்பட வேண்டியது எனவும் கூறியுள்ளார்.

சனல் - 4 ஊடகத்தின் வெளிப்படுத்தல்கள் தொடர்பில் தேவை ஏற்பட்டால் சர்வதேச ரீதியிலான விசாரணைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)






உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# கல்முனை மஹ்மூத் பாலிஹாவில் சாதனை மாணவிகள் கௌரவிப்பு





(நூருல் ஹுதா உமர்)

திகாமடுல்ல மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சருமான மர்/ஹூம் எம்.எம்.எம்.முஸ்தபா (மயோன்) அவர்களுக்கான நினைவேந்தலும், துஆ பிரார்த்தனையும், சாதனை மாணவிகள் கௌரவிப்பும், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸின் தலைமையிலான முதலாவது பொதுக் காலை ஆராதனைக் கூட்டமும் நேற்று கல்லூரி பொது வெளியில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு விசேட விருந்தினராக இக்கல்லூரியில் இருபத்தி ஆறு வருடங்கள் கல்வி வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட முன்னாள் அதிபர் ஏ.ஏச்.ஏ. பஷீர் கலந்து கொண்டார்.

மர்ஹூம் எம்.எம்.எம்.முஸ்தபா (மயோன்) அவர்களுக்கான துஆ பிரார்த்தனை மௌலவி எம்.எம். ஜமால்தீன் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

இந்த நிகழ்வில், அண்மையில் இடம்பெற்ற கல்முனைக் கோட்டமட்ட மெய்வல்லுனர் போட்டிகளில் முதலாம் நிலையினைப் பெற்ற மாணவிகளுக்கும், ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டி பரீட்சை - 2023இல் முதலாம் நிலையில் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவிகளுக்கும் மற்றும் இலங்கை மாதிரி ஐக்கிய நாடுகளின் 16 ஆவது அமர்வு நிகழ்வில் பங்கு பற்றிய மாணவிகளுக்குமான சான்றிதழ்களை விசேட அதிதி வழங்கி வைத்தார்.

கல்லூரியின் பிரதி அதிபர் சமதா மசூது லெவ்வை, உதவி அதிபர்களான ஏ.எச். நதீரா, என்.டி. நதீகா, பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசாரா உழியர்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



## பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கு நிரந்தரப் பணி நியமனங்கள் வழங்கப்பட்டன

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை, செப். 05

அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் பிரதேசங்களைச் சேர்ந்த மூன்று பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கு, அட்டாளைச்சேனை பிரதே செயலகத்திற்கான நிரந்தர நியமனங்கள், நேற்று அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசனால் வழங்கி வைக்கப்பட்டன.



## கலைப்பிரிவில் மாவட்ட நிலையில் முதலாமிடம்

தற்போது வேளியாகியுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி முல்லைத்தீவு உடையார் கட்டு மகாவித்தியாலையத்தில் கல்வி கற்கும் நவரத்தினராஜா தேனுஜா, கலைப்பிரிவில் மாவட்ட நிலையில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கு மாலைக் கதிர் பத்திரிகையின் வாழ்த்துகள். (02)

## கலைப்பிரிவில் மாவட்ட நிலையில் இரண்டாமிடம்



தற்பொழுது வெளியாகியுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி, கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி வினாசி ஓடை மகா வித்யாலயத்தில் உயர்தரத்தில் கல்வி கற்கும் உதயகுமார் நிறஞ்சனா, மாவட்ட நிலையில், கலைப்பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கிறார்.

மிகவும் பின் தங்கிய கிராமமான வினாசி ஒடையிலிருந்து சிறந்த பெறுபேறைப் பெற்றிருக்கும் இவருக்கு மாலைக் கதிர் பத்திரிகையின் வாழ்த்துகள். (02)

## வலி வடக்கு மக்களின் முகாம் வாழ்விற்கு முற்றுப்புள்ளி காணிகள் பகிர்ந்தளிப்பு - அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

வலி வடக்கு அன்ரனிபுரத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட அரச காணிகள் பொது மக்களுக்கு இன்று பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நீண்ட காலமாக அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்ற வலி வடக்கை பூர்வீகமாக கொண்ட சுமார் 49 குடும்பங்களுக்கு தலா ஒன்றரை பரப்பு வீதம் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

குறித்த பிரதேசம் உயர் பாதுகாப்பு பிரதேசமாக இருந்துவந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் கடந்த பெப்ரவரி மாதமளவில் அவை விடுவிக்கப்பட்டிருத்ததுடன், விடுவிக்கப்பட்ட அரச காணிகளை முகாம்களில் வாழும் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளும் அமைச்சரினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குலுக்கல் முறையில் காணிகளை தெரிவு செய்து பயனாளர்களுக்கு வழங்கி வைத்த இன்றைய நிகழ்வில், வலி வடக்கு பிரதேச செயலாளர் திரு.சிவஸ்ரீ, யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் இணைப்பாளர் செல்வி. சாந்தாதேவி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு



சிவகுரு பாலகிருஷ்ணன் மற்றும் கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள், அரச அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (01)



# உக்ரைனுடன் மீண்டும் தானிய ஒப்பந்தம் அமல்படுத்தப்படாது - புடின் அடாப்பிடி!

தங்களது வேளாண் பொருள்களின் ஏற்றுமதியை மேற்கத்திய நாடுகள் அனுமதிக்காத வரை, உக்ரைனுடனான தானிய ஒப்பந்தம் மீண்டும் அமல்படுத்தப்படாது என்று ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

உணவுப் பற்றாக்குறை நிலவி வரும் ஆபிரிக்க, ஆசிய நாடுகளுக்கு உக்ரைனிலிருந்து கருங்கடல் வழியாக தானியங்களைக் கொண்டு செல்வதற்கான அந்த ஒப்பந்தத்தை நிறுத்திவைப்பதாக ரஷ்யா கடந்த ஜூலை மாதம் அறிவித்தது.

இது குறித்து துருக்கி அதிபர் எர்டோகனுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பிறகு விளாடிமீர் புடின் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், உக்ரைனுடன் தானிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டபோது, ரஷ்யாவிலிருந்து உணவுப் பொருள்கள், உரம் ஆகியவற்றை உலகின் பிற நாடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதிப்பதாக உறுதியளிக்கப்பட்டது. ஆனால், அந்த உறுதிமொழியை மேற்கத்திய நாடுகள் நிறைவேற்றவில்லை. இதன் காரணமாகவே அந்த ஒப்பந்த அமலாக்கத்தை நிறுத்திவைத்தோம்.

தாங்கள் கூறியபடி ரஷ்ய வேளாண் பொருள்களின் ஏற்றுமதிக்கு மேற்கத்திய நாடுகள் அனுமதி அளிக்காத வரை தானிய ஒப்பந்தம் மீண்டும் அமல்படுத்தப்படாது. அத்தகைய ஏற்றுமதிக்கு மேற்கத்திய நாடுகள் வழிவகை செய்தால் அடுத்த சில நாள்களிலேயே ரஷ்ய–உக்ரைன் தானிய ஒப்பந்தம் அமல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த பிப்ரவரி



மாதம் 24 ஆம் திகதி படையெடுத்தது. போரின் ஒரு பகுதியாக, கருங்கடல் பகுதியில் போர்க் கப்பல்களை நிறுத்திய ரஷ்யா, அந்தக் கடல் வழியாக உக்ரைன் பொருள்கள் பிற நாடுகளுக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு தடை ஏற்படுத்தியது.

இதனால் சர்வதேச அளவில் உணவுப் பொருள் விநியோகம் தடைப்பட்டு, உலக நாடுகளில் உணவுப் பொருள் பற்றாக்குறை நெருக்கடி ஏற்படும் என்று ஐ.நா. குற்றம் சாட்டியது. எனினும், உணவுப் பொருள் பற்றாக்குறைக்கு உக்ரைன் போர் விவகாரத்தில் ரஷ்யா மீது ஐரோப்பிய யூனியனும் அமெரிக்காவும் விதித்துள்ள கடுமையான பொருளாதாரத் தடைகளும் காரணம் என்று ரஷ்யா கூறி வந்தது.


இந்தச் சூழலில், உக்ரைன் தானிய ஏற்றுமதி தொடர்பாக துருக்கி மற்றும் ஐ.நா.வின் பெருமுயற்சியில் ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே பல மாதங்களாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. அதையடுத்து உருவாக்கப்பட்ட தானிய ஏற்றுமதி ஒப்பந்தத்தில் ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சர் செர்கேய் ஷாய்குவும் உக்ரைன் உள்கட்டமைப்புத் துறை அமைச்சர் ஒலெக்ஸாண்டர் குப்ரகோவும் கையொப்பமிட்டனர்.

துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்ற கையொப்பமிடும் நிகழ்ச்சியில் ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸூம் துருக்கி அதிபர் எர்டோகனும் கலந்துகொண்டனர். அந்த ஒப்பந்தத்தின் கீழ், உக்ரைன் துறைமுகங்களில் உணவு தானியங்கள் கப்பலில் ஏற்றப்படுவதை துருக்கி, உக்ரைன், ஐ.நா. அதிகாரிகள் மேற்பார்வையிடுவதற்கும் கருங்கடலைக் கடந்து துருக்கியின் பொஸ்பரஸ் நீரிணை வழியாக செல்லும் தானியக் கப்பல்களை ஐ.நா., ரஷ்யா, உக்ரைன், துருக்கி அதிகாரிகள் அடங்கிய கூட்டுக் குழு கண்காணிப்பதற்கும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

அத்தோடு, ஒப்பந்த காலம் முழுவதும் துறைமுகங்கள் மீதோ, சரக்குக் கப்பல்கள் மீதோ தாக்குதல் நடத்தாமல் இருக்க ரஷ்யாவும் உக்ரைனும் சம்மதித்தன. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஒப்பந்தம் மூலம் சர்வதேச அளவில் உணவு நெருக்கடி ஏற்படும் அபாயம் தவிர்க்கப்பட்டதாக பாராட்டப்பட்டது.

இந்த நிலையில், ஏற்கனவே ஒப்புக்கொண்டபடி தங்களது வேளாண் பொருள்களின் ஏற்றுமதியை மேற்கத்திய நாடுகள் அனுமதிக்க வலியுறுத்தி அந்த ஒப்பந்த அமலாக்கத்தை ரஷ்யா தற்போது நிறுத்திவைத்துள்ளது. இதன் மூலம், உயிர் காக்கும் உணவுப் பொருள்களை தனது போர் ஆயுதமாக புடின் பயன்படுத்துவதாக மேற்கத்திய நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. (04)

## கேபான் அதிபராக ராணுவத்தின் தலைமைத் தளபதி பதவியேற்பு




மேற்கு ஆபிரிக்க நாடான கேபானில் கடந்த வாரம் கிளர்ச்சியில் ஈடுபட்ட ராணுவ தலைமைத் தளபதி பிரைஸ் க்ளாடைர் ஒலிகு குவேமா, நாட்டின் அதிபராக நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

இது குறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

கேபானின் புதிய அதிபராக ராணுவத் தலைமைத் தளபதி பிரைஸ் க்ளாடைர் ஒலிகு குவேமா திங்கட்கிழமை பதவியேற்றுக் கொண்டார். தலைநகர் லீப்ரவில்லில் உள்ள அதிபர் மாளிகையில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்ச்சியில் அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் ஏராளமான அதிகாரிகள், ராணுவத்தினர் மற்றும் ராணுவ ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய குவேமா, நாட்டில் அடுத்த தேர்தல் நடைபெற்று, புதிய அதிபர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் வரை இடைக்கால அதிபராக செயல்பட விருப்பதாக அறிவித்தார். இருந்தாலும், தேர்தலுக்கான திகதி எதையும் அவர் குறிப்பிடவில்லை என்று அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ராணுவக் கிளர்ச்சி அடிக்கடி நடைபெற்று வரும் ஆபிரிக்க கண்டத்தின் மேற்குக் கடலோரம் அமைந்துள்ள நாடு கேபான். எண்ணெய் வளம் மிக்க இந்த நாட்டை கடந்த 55 ஆண்டுகளாக ஆண்டு வரும் குடும்பத்தைச் சேர்ந்த அலி பாங்கோ ஒண்டிம்பா, கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் நாட்டின் அதிபராக இருந்து வந்தார்.

இந்த நிலையில், கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற அதிபர் தேர்தலில் அவர் மூன்றாவது முறையாகப் போட்டியிட்டார். ஏற்கெனவே 2016 ஆம் ஆண்டு தேர்தலில் நடைபெற்றதைப் போலவே இந்தத் தேர்தலிலும் மிகப் பெரிய அளவில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இதனை எதிர்த்து தீவிர போராட்டங்களும் நடைபெற்றன.

இந்த நிலையில், ஓகஸ்ட் 26 இல் நடைபெற்ற தேர்தலிலும் அலி பாங்கோ ஒண்டிம்பா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆயினும், அதிபர் பதவியிலிருந்து அவரை அகற்றிவிட்டு ஆட்சியைக் கைப்பற்றியதாக ராணுவம் கடந்த மாதம் 30 ஆம் திகதி அறிவித்தது.

அதிபர் ஒண்டிம்பா, எப்போது என்ன செய்வார் என்பதைக் கணிக்க முடியா தவராகவும், பொறுப்பற்றவராகவும் செயல்பட்டார். கேபானை அவர் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் அபாயம் நிலவுகிறது. இந்தக் காரணங்களால் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டதாக ராணுவம் தெரிவித்திருந்தது. (04)

## ஜில் பைடனுக்கு மீண்டும் கொரோனா

அமெரிக்க அதிபரின் மனைவி ஜில் பைடனுக்கு மீண்டும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு சோதனை நடத்தப்பட்டது. ஆனால், அவருக்கு கொரோனா பாதிப்பு இல்லை எனத் தெரிய வந்துள்ளது.

72 வயதான ஜில் பைடன் கடைசியாக கடந்தாண்டு ஓகஸ்ட் மாதம் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மீண்டும் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

கடந்தாண்டு ஜூலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

நேற்று மாலை உடல் நலம்



பாதிக்கப்பட்ட ஜில் பைடன் கொரோனா சோதனை செய்ததாகவும், இதையடுத்து டெலாவேரில் உள்ள இல்லத்தில் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

அவருக்கு லேசான அறிகுறிகள் மட்டுமே உள்ளதாக வெள்ளை மாளிகை தகவல் தெரிவித்துள்ளது. (04)

## ஜி 20 மாநாட்டில் பிரான்ஸ் அதிபர் பங்கேற்பு ஸெலென்ஸ்கியுடன் தொலைபேசியில் பேச்சு



டில்லியில் நடைபெறவுள்ள ஜி 20 மாநாட்டில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் கலந்துகொள்ளவுள்ளதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

முன்னதாக அவர் உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கியுடன் தொலைபேசியில் பேசியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜி 20 நாடுகள் கூட்டமைப்புக்கு இந்தியா தலைமை வகித்துவரும் நிலையில், இந்த ஆண்டுக்கான அந்த அமைப்பின் உச்சிமாநாடு தில்லியில் வரும் 9, 10 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன், அவுஸ்திரேலிய பிரதமர் அல்பனேசி, பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், ஜப்பான் பிரதமர் கிஷிடா உள்ளிட்டோர் பங்கேற்பது உறுதியாகியுள்ளது.

ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின், சீன அதிபர் ஜின்பிங் உள்ளிட்டோர் இந்த மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்றும் பதிலாக அந்த நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிரான்ஸ் அதிபர் மக்ரோன், ஜி 20 மாநாட்டில் கலந்துகொள்வது உறுதியாகியுள்ளது. இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பை அந்த நாட்டின் வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ளது.

இந்தியாவிற்கான பயணத்தைத் தொடர்ந்து அவர் பங்களாதேசுக்கும் செல்லவிருக்கிறார்.

முன்னதாக மக்ரோன், உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கியுடன் தொலைபேசியில் பேசியுள்ளார். கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா உள்ளிட்டோரும் ஸெலென்ஸ்கியுடன் தொலைபேசியில் பேசியுள்ளனர். ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே ஓராண்டுக்கும் மேலாகப் போர் நீடித்து வருகிறது.

டில்லி ஜி 20 மாநாட்டுக்கு உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கி அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# கல்முனையில் ‘1926‘ உளநல ஆலோசனை மைய சேவைகள் விஸ்தரிப்பு தொடர்பான சந்திப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிராந்திய சுகாதாரப் பிரிவிலுள்ள கல்முனை ஆதார வைத்தியசாலையில் உளநல ஆலோசனை மையத்தின் சேவைகள் 1926 என்ற தொலைபேசி எண்ணினூடாக விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் இரா.முரளீஸ்வரனின் தலைமையில் வைத்திய சாலையில் நடைபெற்றது.

1926 என்ற இலக்கத்தோடு தொடர்பு கொள்கின்ற பொழுது, தேவையான உளநல ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று ஆதரவைத்தியசாலை வைத்தியர் தெரிவித்தார். வைத்திய சாலையின் கல்விப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஸ்ட தாதிய உத்தியோகத்தர் எஸ்.அழகரெத்தினம் ஆரம்ப அறிமுக உரை நிகழ்த்தினார்.

1926 என்ற இலக்கத்தை சமூகத்தின் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கல்முனை ஆதாரவைத்திசாலையின் உளநல வைத்திய நிபுணர் டொக்டர் ஏ.ஜி.எம். ஜுறைச், சிரேஸ்ட உளநல மருத்துவ அதிகாரி டொக்டர் யூ.எல். சராப்டீன், உளநலமருத்துவர் எம்.ஏ.அனீஸ்அகமட், மருத்துவ அதிகாரி டொக்டர் பி.தாசிஸ் ஆகியோரும் உளநலப் பிரிவுத் தாதி உத்தியோகத்தர்களும் நிகழ்வில் கலந்துகொண்டார்கள்.

1926 என்ற இலக்கத்தோடு தொடர்பு கொள்ளுகின்ற அத்தனை விடயங்களும் ரகசியமாக பேணப்படும் என்றும், பரீட்சைத் தோல்வி, குடும்ப உறவு தொடர்பான பிரச்சினை, போதை வஸ்து பிரச்சனை, உளநோய்ப் பிரச்சனை என அனைத்து விதமான உள சம்பந்தமான பிரச்சினைகளுக்கும் இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்கின்ற பொழுது உரிய ஆலோசனைகளையும் தீர்வுகளையும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

அண்மைக்காலத்தில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடைய தற்கொலைகள் அதிகரித்து வருகின்றன. தற்பொழுது பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. தோல்வி அடைந்த மாணவர்கள் உளநல ஆலோசனை தேவைப்பட்டால் இந்த இலக்கத்தோடு தொடர்பு கொண்டு தங்களுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளலாம். இதனை ஆசிரியர்கள் பெற்றோர்களும் அறிந்து அவர்களுக்கு உதவ வேண்டும், என்றும் அறிவுறுத்தப்பட்டது.



இறுதியில் கலந்துகொண்டவர்களதும், ஊடகவியலாளர்களதும் கேள்விகளுக்கான பதில்கள் வைத்திய அதிகாரிகளால் வழங்கப்பட்டன.

# அரசாங்க ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் முன்பள்ளிகளை இணைக்கும் நிகழ்வு



(எம்.எப்.நவாஸ்)


இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் அரச ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் முன்பள்ளிப் பாடசாலை மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வுகள் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் அவர்களின் வழிகாட்டலிலும், உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஸாபிர் சட்டத்தரணி அவர்களின் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் அட்டாளைச்சேனை ஆலம்குளம் அஷ்ரஃப் ஞாபகார்த்த முன்பள்ளி பாடசாலை மாணவர்களை இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் அரச ஓய்வூதிய திட்டத்தில் இனணத்துக் கொள்வதும், அவர்களுக்கு தவணைப் பணம் செலுத்தும் புத்தகம் வழங்கும் நிகழ்வும் பிரதேச செயலகத்தின் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் விடயப் பொறுப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எல்.நஜிமுடீனின் ஏற்பாட்டில் நேற்று அஷ்ரஃப் ஞாபகார்த்த முன்பள்ளி பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிராம சேவகர் எம்.ஆர்.முஸாதிக், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.நஜிமுடீன், அஷ்ரஃப் ஞாபகார்த்த முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டார்கள்.




# யானைத் தாக்கச் சேதங்களை குறைத்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு



(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாவடிப்பள்ளி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், கிராம அலுவலர் ஏ.எம். அலியார் தலைமையில் டெங்கு ஒழிப்பு, யானைத் தாக்கங்களினால் ஏற்படுகின்ற சேதங்களை குறைத்தல், இயற்கை அனர்த்தங்களின் எதிர்வு கூரலின்போது முன் ஆயத்தங்களை எவ்வாறு மேற்கொள்வது என்பன தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது

இதில், வனவிலங்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர், காரைதீவு பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியலயப் பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் போன்ற பலரும் வளவாளர்களாகக் கலந்துகொண்டு பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தினர்.

கிராமிய ஒத்துழைப்புமன்ற உறுப்பினர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், முன்பள்ளி ஆசிரியைகள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# 8 வயதுச் சிறுமிக்கு தவறான முறையில் சிகிச்சை இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட அவலம்!


## உரிய விசாரணை நடத்தக்கோரி பெற்றோர் கடிதம்

மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

National child Protection Authority (NCPA)
330 Thalawathugoda Road,
Sri Jayawardenepura Kotte 10100

Hon. Minister of Health,
Ministry of Health
SUWASIRIPAYA
No.385, Rev.Baddegama Wimalawansa Thero Mawatha
Colombo 10

Hon. Minister of Women and Child Affairs,
Ministry of Women and Child Affairs,
Battaramulla, Sri Lanka.





யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியைச் சேர்ந்த யாழ், இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 3 இல் கல்வி கற்கும் 8 வயதுச் சிறுமி, காய்ச்சல் காரணமாக கடந்த 25 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலை நோயாளர் விடுதியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சையின் போது மறுநாள் 26 ஆம் திகதி , சிறுமியின் கையில் "கனுலா" (குளுக்கோஸ், மருந்துகள் ஏற்றுவதற்காக மணிக்கட்டின் கீழ் பொருத்தப்படும் ஊசி) பொருத்தப்பட்டு , நோய் எதிர்ப்பு மருந்து (அன்டிபயோடிக்) ஏற்றப்பட்டுள்ளது.

"கனுலா" உரிய வகையில் சிறுமியின் கையில் பொருத்தப்படாததால் , சிறுமிக்கு வலி ஏற்பட்டுள்ளது. அது தொடர்பாகச் சிறுமி கூறிய போதிலும் தாதியர்கள், ஊசி ஏற்றினால் வலிக்கும் எனக் கூறி அதுபற்றிக் கவனம் செலுத்தவில்லை.

அந்த நிலையில் சிறுமியின் இரத்த நாளங்களில் பாதிப்பு ஏற்பட்டு, கையின் மணிக் கட்டின் கீழான பகுதி செயலிழந்துள்ளது. அதனால் சிறுமியின் கையை மணிக் கட்டுடன் அகற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டதை அடுத்து, சிறுமியின் கைப் பகுதி அகற்றப்பட்டுள்ளது.

எட்டு வயதான சிறுமியின் கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டமை தொடர்பில் உரிய நடவடிக்கைகள், விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கை என்பன எடுக்கப்பட வேண்டும் என பெற்றோரால் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் குறித்த சிறுமியின் பெற்றோர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளதுடன், கடிதத்தின் பிரதிகள் சுகாதார அமைச்சு, வடமாகாண ஆளுநர் உள்ளிட்ட தரப்புக ளுக்கும் அனுப்பபட்டுள்ளன.

அக்கடிதத்தில், எமது மகளான எட்டு வயதுடைய சாண் டில்யன் வைசாலியின், இடது கை மருத்துவ நிபுணர் திரு. என்.எஸ். சரவணபவானந்தனின் குழந்தைநல விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றபோது, 12ஆம் விடுதி யைச் சேர்ந்த வைத்திய நிபுணர், வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களின் வேண்டுமென்ற பிழை யான செயலின் விளைவாக அதாவது 2.09.2023 ஆம் திகதியன்று மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது.

இது தொடர்பான விரிவான விடயங்கள் பின்வருமாறு:

எமது மகளான சாண்டில்யன் வைசாலிக்கு காய்ச்சல் ஏற்பட்டதன் காரணமாக நாம் எமது குழந்தையை வண்ணை மேற்கு வைத்தியசாலையில் (கெங்காதரன் மருத்துவமனை) இல் 23.08.2023 அன்று வைத்திய ஆலோசனைக்காக குழந்தை நலமருத்துவ நிபுணர் திரு.என்.எஸ்.சரவணபவானந்தனிடம் காட்டினோம்.

காய்ச்சல்குறையாமையினால் 24.08.2023 அன்றும் வண்ணை மேற்கு வைத்தியசாலையில் (கெங்காதரன் மருத்துவமனை) வைத்திய ஆலோசனைக்காக குழந்தையைக் காட்டினோம்.

அங்கு வழங்கப்பட்ட ஆலோசனையின்படி, தனியார் வைத்தியசாலையான நொதேர்ன் மருத்துவமனையில் இல் 24.08.2023 ஆம் திகதியன்று குழந்தைநல வைத் திய நிபுணர் திரு. என்.எஸ்.சரவணபவானந்தன் அவர்க ளின் சிகிச்சைக்காக நொதேர்ன் மருத்துவமனையின் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

24.08.2023 மற்றும் 25.08.2023 ஆகிய இரு நாட்களும் அங்கு தங்கி சிகிச்சை பெற்ற பின்னர் நோய் நிலையின் தன்மை அதிகரித்தமையாலும் கூடுதல் பராமரிப்புக்காகவும் குழந்தைநல வைத்திய நிபுணர் திரு. என்.எஸ்.சரவணபவானந்தன் அவர்க ளின் ஆலோசனையின் பேரில் 25.08.2023 ஆம் திகதியன்று இரவு எமது மகள் நொதேர்ன் மருத்துவமனையிலிருந்து மாற்றப்பட்டு, யாழ் போதனா வைத்தியசாலையில் குழந்தை நல வைத்திய நிபுணர் திரு. என்.எஸ்.சரவணபவானந்தன் அவர்களுக்குரிய 12ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டார்.

தனியார் வைத்தியசாலையிலிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டமை குழந்தை வைத்திய நிபுணர் திரு. என்.எஸ்.சரவணபவானந்தன் அவர்களின் ஆலோசனையின் பேரிலேயே நடைபெற்றது.

நொதேர்ன் மருத்துவமனையில் கனுலா, வைசாலியின் வலது கையில் மணிக்கட்டின் வெளிப்புறத்தில் இடப்பட்டு குறித்த கனுலா ஊடாக மருந்து ஏற்றப்பட்டிருந்தது.

நொதேர்ன் மருத்துவமனையில் கனுலா வலது கையில் இடப்பட்டிருக்கையிலும் மருந்து ஏற்றப்பட்டபோதும் எவ்வித பிரச்சனையும் இருக்கவில்லை.

இதன் பின்னர் யாழ் போதனா வைத்தியசாலை 12ஆம் விடுதியில் வைத்து வெள்ளிக்கிழமை இரவு நொதேர்ன் மருத்துவமனையில் போடப்பட்ட கனுலா ஊடாகவே மருந்து ஏற்றப்பட்டது. பின்னர் அடுத்த நாள் 26.08.2023 ஆம் திகதி சனிக்கிழமை காலை, அவருக்கு இடது கையின் மணிக்கட்டின் உட்பகுதியில் கனுலா பொருத்தப்பட்டது.

கனுலா மூடியை திறந்து மருந்து ஏற்ற முயற்சித்த ஒவ்வொரு வேளையிலும் இரத்தம் பாய்ந்து நிலத்தில் சிதறியது. இது தொடர்பில், தாயாரான எனக்கு சந்தேகம் இருந்தமையினால் கடமையில் இருந்த வைத்தியரிடம் (எச் ஓ) இதைக்கூறிய போது அது வழமை, என எனக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. சனிக்கிழமை காலையிலிருந்து சேலைனில் மருந்து கலக்கப்பட்டு குறித்த இடது கையில் போடப்பட்ட கனுலா வழியாக ஏற்றப்பட்டு வந்தது.

இதன்பின்னர் 27.08.2023 ஆம் திகதியன்று அதாவது ஞாயிற்றுக்கிழமை, எமது மகள் உறங்கிக் கொண்டிருந்த சமயத்தில் இரவு 12 மணிக்குச் செலுத்தப்படவேண்டிய ஊடனைெயஅலஉடைை என்ற மருந்தினை குறித்த 12 ஆம் விடுதியைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் ஒருவர் இரவு 11.45 மணிக்கு சேலைன் உடன் கலக்காது ஊசி மூலம் கனுலாவினுள் நேரடியாக செலுத்தினார்.

மேற்குறித்தவாறு மருந்து நேரடியாக கனுலா ஊடாக ஏற்றப்பட்டவுடன் உறங்கிக் கொண்டிருந்த எமது மகள் விழித்து எழுந்து வலியால் துடிக்கத் தொடங்கினார்.

இதனையடுத்து மகளுடன் இருந்த நான் (சாண்டில்யன் சர்மிளா) அங்கு கடமையிலிருந்த தாதிய உத்தியோகத்தர் ஒருவரிடம் இது குறித்து தெரிவித்தேன். அவர் அன்டிபயோடிக் மருந்தின் தன்மையால் அப்படித்தான் இருக்கும் என்று கூறிவிட்டார். தொடர்ந்தும் மகள் வலியால் துடித்தவண்ணம் இருந்ததால் மீண்டும் நான் விடுதியிலுள்ள தாதியர் நிலையத்துக்குச் சென்று அறிவித்ததையிட்டு, முதலில் நான் கூறிய தாதிய உத்தியோகத்தரும் மருந்தினை ஏற்றிய தாதிய உத்தியோகத்தரும் வந்து மகளைப் பார் வையிட்டனர்.

இரு தாதிய உத்தியோகத்தர்களும் இணைந்து தனியே சேலைனை மட்டும் கனுலா ஊடாக ஏற்ற முயற்சித்த போதும் வெறும் சேலைனினைக் கூட அந்தக் கையில் போடப்பட்ட கனுலா ஊடாக ஏற்ற முடியவில்லை.

(07ஆம் பக்கம் பார்க்க)

## எனது பேத்தியின் இந்த நிலைக்கு விடுதியில் இருந்த தாதியரின் அசண்டையீனமே முழுக் காரணமாகும்!

### கண்ணீர் மல்கத் தெரிவித்த சிறுமியின் தாத்தா

8 வயதுச் சிறுமியின் இடது கை , மணிக்கட்டின் கீழ் அகற்றப்பட்டுள்ள நிலையில், சிறுமி தொடர்ந்தும் யாழ் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பில் சிறுமியின் தாத்தா சுப்பையா கனக நாயகம் தெரிவிக்கையில்,

கடந்த மாதம் 22 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டிருந்தது சரவணபவன் வைத்தியர் மூலம் மருந்துகளை பெற்றுக் கொண்டோம். மருந்துகளை எடுத்தும் தொடர்ந்தும் காய்ச்சல் இருந்ததால் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் விடுதியில் வைத்திருந்தோம்.

அங்கு இருக்கின்ற தாதியர்கள் எனது பேத்திக்கு கையில் ஊசி மருந்து செலுத்துவதற்கான ஊசியை ஏற்றி இருந்த போது எந்த தப்பும் நடந்ததாக அப்போது எங்களுக்குத் தெரியவில்லை,

பின்னர் மருந்துகளை ஏற்றுக் கொண்டபோது கை வீங்கி இருந்தது. இது தொடர்பில் அங்கிருந்த தாதிக்கு தெரியப்படுத்திய போதும் அவர் அதனைக் கண்டு கொள்ளவில்லை. தொடர்ந்து அன்று இரவு 11 மணி அளவில் மருந்து ஏற்றும்போது மருந்து மற்றும் ரத்தம் வெளியில் வருகிறது என்று சொன்ன அப்போதும் அவர்கள் கவனம் செலுத்தவில்லை.

அதற்கு அடுத்த நாள் வைத்தியரிடம் சொல்லிய போதுதான் வைத்தியர் பார்வையிட்ட போது கை



முழுமையாக செயலிழந்து விட்டதாகவும், அதற்குரிய மருந்துகளை செய்து அந்த கையை பழைய படி கொண்டு வருவோம் என்று சொல்லிய போதும், கடந்த இரண்டு நாளைக்கு முதல் கை கழற்றப்பட்டு அதற்குரிய மருந்துகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தற்போதும் அவசர சிகிச்சை பிரிவிலேயே எனது பேத்தி உள்ளார். இதுவரை எதுவும் அறிவிக்கவில்லை.

இதற்கு முழுமையான காரணம் அந்த விடுதியில் இருந்த தாதியரின் அசண்டையீனமேயாகும்!

நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இனிமேல் இப்படி ஒரு சம்பவம் நடக்கவே கூடாது! நாங்கள் தற்போது படுகின்ற வேதனை இன்னும் ஒருவர் படக்கூடாது, என அழுகையுடன் வேண்டியுள்ளார்.

# 8 வயதுச் சிறுமிக்கு தவறான முறையில் சிகிச்சை ..........

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து 28.08.2023 ஆம் திகதியன்று அதிகாலை 4 மணியளவில் வைத்திய அதிகாரியும் தாதிய உத்தியோகத்தர்களும் வந்து பார்வையிட்டு, குறித்த இடது கையில் போடப்பட்ட கனுலா அகற்றப்பட்டது.

7.30 மணியளவில் றுயசன சுழரனெ வந்த பெண் வைத்திய அதிகாரி ஒருவர் பிள்ளையின் கைவீக்கத்தைப் பார்த்து விட்டு பிள்ளையின் கையில் ஆழீலைெ கொடுத்தார். பின்னர் காலை 10 மணியளவில் குழந்தைநல வைத்திய நிபுணர் திரு. என்.எஸ்.சரவணபவானந்தன் அவர்கள் வந்து, குளிர்ந்து நீலம் பாரித்து இருந்த கையினைப் பார்வையிட்டுச் சென்றார்.

இதனையடுத்து மீள வருகை தந்த குழந்தைநல வைத்திய நிபுணர் திரு. என்.எஸ்.சரவணபவானந்தன் அவர்கள் குழந்தையின் அருகாமையிலிருந்தே உடனடியாக தொலைபேசியூடாக கதைத்ததையடுத்து, வைத்திய நிபுணர் திரு.மதிவாணன் அவர்கள் வந்து

கையினைப் பரிசோதித்து, கையில் நாடித்துடிப்பு இல்லை என்பதையும், கையில் இரத்த ஒட்டத்தில் ஒட்சிசன் இல்லை என்பதையும் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தி சிடி ஸ்கான் பரிசோதனைக்காக உத்தரவிட்டார். இதனையடுத்து அன்றைய தினம் அதாவது, 28.08.2023 ஆம் திகதியன்று மதியம் சிடி ஸ்கான் பரிசோதனை செய்யப்பட்டது.

மீண்டும் சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு எடுக்கப்பட்டு, இடது கையில் ஏற்படும் அதீத வலியைக் கட்டுப்படுத்துவதற்காக உணர்விழக்கச் செய்யும் ஊசி கையில் ஏற்றப் பட்டதாகக் கூறப்பட்டது. அன்றைய தினம் இரவு 8 மணிக்கு மீண்டும் சத்திரசிகிச்சைக் எடுக்கப்பட்டு கையில் அழுத்தத்தைக் குறைப்பதற்காக இழையத்தை வெட்டிச் செய்யப்படும் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

இதன்போது கையில் இரத்தகட்டி உருவாகியுள்ளதாகவும், கையில் இதன் காரணமாக இரத்தோட்டம் தடைப்பட்டிருப்பதாகவும், சத்திரசிகிச்சை செய்யப்படவிருப்பதாகவும் கூறப்பட்டது. இரத்தக்கட்டியை கரைக்கும் Heparin எனப்படும் மருந்தும் தொடர்ச்சியாக ஏற்றப்படவிருப்பதாக வைத்திய நிபுணரால் தெரியப்படுத்தப்பட்டது.

குறித்த சத்திரசிகிச்சையின் பின்னர் எமது மகள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை 29.08.2023 ஆம் திகதியன்று மதியம், மீளவும் சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு எடுக்கப்பட்டு இரத்தக்கட்டியைக் கரைப்பதற்கான சத்திரசிகிச்சை செய்யப்பட்டு தொடர்ந்தும் உநியசளை ஏற்றப்பட்டு வந்தது.

தொடர்ந்தும் அடுத்து வந்த இரு நாட்களுக்கு அதாவது, 30.08.2023 மற்றும் 31.08.2023 அதாவது, புதனும் வியாழனும் மருந்து ஏற்றப்பட்டு வந்தது.

ஆயினும், இந்த முயற்சிகள் பலனளிக்கவில்லை என்பதோடு மகளின் கை பழைய நிலைக்குத் திரும்பவில்லை. மாறாக கையின் கறுப்பு நிறம் அதிகரித்துக் கொண்டு சென்றதோடு, தொடர்ந்தும் குளிர்ந்த நிலையில் காணப்பட்டது.

01.09.2023 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிதீவிர சிகிச்சைப்பிரிவுக்கு வருகை தந்த பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணரால் மேலதிக கிருமித்தொற்று நிலையையும் உயிராபத்தையும் தடுக்க எமது மகளின் இடது கை மணிக்கட்டுக்குக் கீழான பகுதி அகற்றப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இதன்பிரகாரம் அடுத்த நாள் 2.09.2023 சனிக்கிழமை காலை 9 மணியளவில் சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு எமது மகள் எடுக்கப்பட்டு, இடது கை மணிக்கட்டின் கீழான பகுதி முற்றாக அகற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து எமது மகள் இன்னமும் அதி தீவிர சிசிக்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பில் பின்வரும் விடயங்களை தங்களது கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

1. எமது மகள் வைசாலி காய்ச்சல் காரணமாகவே விடுதியில் அனுமதிக்கப்பட்டார்.

2. காய்ச்சலுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை தவறான முறையிலும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமலும் வழங்கப்பட்டுள்ளது.

3. கனுலா வைத்தியரால் போடப்பட்டிருக்கவில்லை. தாதிய உத்தியோகத்தராலேயே குறித்த கனுலா போடப்பட்டது.

4. அவ்வாறு தாதிய உத்தியோகத்தரால் போடப்பட்ட குறித்த கனுலா சரியான முறையில் போடப்பட்டிருக்கவில்லை.

5. மருந்து உரிய முறையில் உட்செலுத்தப்படவில்லை. சேலைன் உடன் கலந்து ஏற்றப்படவேண்டிய மருந்து கனுலா ஊடாக நேரடியாக உட்செலுத்தப்பட்டது.

6. மருந்து அவ்வாறு நேரடியாக உட்செலுத்தப்பட்டதும் ஏற்பட்ட வலி மற்றும் தாக்கங்கள் குறித்து உடனடியாக தாயாரால் தாதிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டபோதிலும், பாரதூரமான அலட்சியத்தாலும் கவனக்குறைவாலும் குறித்த கையின் நிலை குறித்து உடனடியாக கவனத்தில் எடுக்கப்படாமை, உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படாமை.

மேற்குறித்த நடவடிக்கைகள் மூலம் எமது எட்டு வயதான மகளின் கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டு எமது மகளின் எதிர்கால வாழ்க்கை கேள்விக்குட்படுத்தப்பட்டு சவாலானாக மாற்றப்பட்டுள்ளது.

இது எமக்கும் எமது மகளுக்கும் நிரந்தர சேதத்தை உண்டுபண்ணியதோடு, ஈடுசெய்யமுடியாத இழப்பு நேர்ந்துள்ளது.

எமது மகளின் இந்த நிலைக்கு 12ஆம் விடுதியின் தாதிய உத்தியோகத்தர்களும் வைத்தியர்களும் வைத்திய நிபுணரும் வைத்தியசாலை நிர்வாகமுமே காரணமாகும்.

குறித்த 12 ஆம் விடுதியில் சம்பவம் நடைபெற்றபோது, உத்தியோகபூர்வமாக கடமையில் இருந்த House Officer, Senior House Officer குறித்த விடுதிக்கு பொறுப்பான குழந்தைநில வைத்திய சிகிச்சை நிபுணர் திரு. என்.எஸ்.சரவணபவானந்தன், வைத்தியசாலைப் பணிப்பாளரான தாங்கள் என அனைவரும் பொறுப்புக்கூற வேண்டிய கடமை வாய்ந்த உத்தியோகத்தர் ஆவர்.

எனவே, எமது மகளுக்கு நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக குறித்த தாதிய உத்தியோகத்தரை பணிநீக்கம் செய்ய வேண்டும் எனவும், குறித்த சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், விடுதிக்குப் பொறுப்பான வைத்திய சிகிச்சை நிபுணர்அனைவருக்கும் எதிராக உரிய விசாரணைக்கு உத்தரவிடப்படுவதுடன், சட்ட நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

பிள்ளைக்கு ஏற்பட்ட உடல் உளரீதியான மீள முடியாத தாக்கத்திற்காகவும் எமக்கும் எமது குடும்பத்திற்கும் ஏற்பட்ட மீள முடியாத தாக்கத்திற்காகவும் தங்களிடமிருந்து நீதியான விசாரணையையும் நியாயமான தீர்ப்பையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

விசாரணை முடிவில் குறித்த சம்பவத்துக்கான (கை அகற்றப்பட்டதற்கான) சரியான மருத்துவ காரணத்தையும் எழுத்து மூலம் அறியத்தர வேண்டும் எனவும், எதிர்காலத்தில் இவ்வாறான மருத்துவ நிராகரிப்புக்களினால் உயிர் இழப்புக்கள், அவய இழப்புக்கள் ஏற்படா வண்ணம் எங்களுடைய சமூகத்தைப் பாதுகாக்கும் படியும் பாதிக்கப்பட்ட எங்களது குழந்தையின் சார்பில் வேண்டி நிற்கின்றோம்.

எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள குற்றவியல் மற்றும் குடியியல் வழக்கு நடவடிக்கைகளை மட்டுப்படுத்தாமலும், அதற்கு பங்கம் ஏற்படாதவாறும் இக்கடிதம் அனுப்பப்படுகிறது - என்றுள்ளது.




## அத்துருகிரிய ஜெரோம் உள்ளிட்ட 3 பேர் கைது!

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பல்வேறு குற்றச் சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் அத்துருகிரிய ஜெரோம் உள்ளிட்ட மூவர், வெலிக்கடைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிகம பகுதியில், ரி - 56 ரகத் துப்பாக்கியுடன் சிலர் நடமாடுகின்றனர் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய சோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் பயணித்த கார் ஒன்றும் கையகப்படுத்தப்பட்டது.

கைதானவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (03)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.09.2023இல் வெளியிடப்பெற்றது.